## தமிழ்நாடு முதலமைச்சர் போல் சட்டத்தை மதிக்கக்கூடியவர் இந்தியாவிலேயே கிடையாது!

# 2014 ஆம் ஆண்டுத் தீர்ப்பின் அடிப்படையிலேயே திருப்பரங்குன்றத்தில் தீபத்தை ஏற்றவேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு!

### சென்னை, அண்ணா அறிவாலயத்தில்

## அமைச்சர் எஸ்,ரகுபதி – கழக அமைப்புச் செயலாளர் ஆர்,எஸ்,பாரதி பேட்டி!

சென்னை, டிச.6 –

**“திருப்பரங்குன்றத்தில் 2014 ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலேயே எப்போதும் தீபம் ஏற்றப்படும் இடத்திலேயே, அதே வழக்கப்படியே தற்போதும் கார்த்திகை தீபத்தை ஏற்ற வேண்டும் என்பதுதான் அரசின் நிலைப்பாடு!” என்றும் “முதலமைச்சரைப் போல் சட்டத்தை மதிக்கக்கூடிய ஒருவர் இந்தியாவிலேயே கிடையாது!” என்றும் இன்று போராடுபவர்களுக்கு அடிமையாக பழனிசாமி கிடைக்க முடியுமே தவிர, வேறு அடிமைகள் யாரும் தமிழ்நாட்டில் கிடைக்க மாட்டார்கள்! என்றும் சென்னை அண்ணா அறிவாலயத்தில் அமைச்சர் எஸ்.ரகுபதி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்கையில் விளக்கமுடன் குறிப்பிட்டனர்.**

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் (04-12-2025) அமைச்சர் எஸ்.ரகுபதி, தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் திருப்பரங்குன்றம் கார்த்திகைத் தீப விவகாரம் தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டி வருமாறு:

**தமிழ்க்கடவுள் முருகனுக்கான திருவிழா கார்த்திகை தீபம்!**

தமிழ்நாட்டில் எப்படியாவது காலூன்ற வேண்டும் எனும் நோக்கத்தோடு இருக்கும் இந்துத்துவ அமைப்புகள் எதை கையில் எடுப்பது என தெரியாமல் முழித்து க் கொண்டிருக்கிறார்கள். கார்த்திகைத் தீபத் திருவிழா என்பது தமிழ்க் கடவுள் முருகனுக்காக கொண்டாடப்படும் திருவிழாவே தவிர இந்தியாவில் இருக்க இந்துக்களுடைய பண்டிகை அல்ல; அது தமிழர்களுடைய பண்டிகை. உலகெங்கும் இருக்கக்கூடிய தமிழர்கள் கார்த்திகைத் திருவிழாவை கொண்டாடுவார்கள். இதில் இந்துத்துவாவுக்கு எந்த வேலையும் கிடையாது.

ஆனால் இப்பொழுது திடீரென்று திருப்பரங்குன்றத்தில் கார்த்திகைத் தீபத்தை ஒட்டி ஒரு பிரச்சனையை கிளப்பி இருக்கிறார்கள். நீதிமன்றத்தை அணுகி அங்கே ஒரு உத்தரவை வாங்கி இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒன்றை மறந்துவிட்டார்கள். 2014ஆம் ஆண்டு நீதியரசர்கள் பவானி சுப்பராயன் அவர்களும் அதைப்போல நீதியரசர் கல்யாணசுந்தரம் அவர்களும் 2014ஆம் ஆண்டு ஒரு தீர்ப்பை தந்திருக்கிறார்கள்.

இன்று எந்த இடத்தில் கார்த்திகை தீபத்தை வழக்கப்படி ஏற்றிக் கொண்டிருக்கிறோமோ அதே இடத்தில் தான் ஏற்ற வேண்டும் என்று 2014லேயே தீர்ப்பு வந்திருக்கிறது. ஆனால் அதைப் புரிந்து கொள்ளாதவர்கள், அதை அறிந்து கொள்ளாதவர்கள், அதை பற்றி தெரிந்து கொள்ளாதவர்கள், ஏதோ புதிதாக ஒன்றை கண்டுபிடித்ததை போல நேற்று முன்தினம் நீதிமன்றத்தை அணுகி எங்களுக்கு கார்த்திகைத் தீப விளக்



கேற்றுவதற்கு அனுமதி வேண்டும் என்று கேட்டு ஒரு இடத்தை குறிப்பிட்டு கேட்டிருக்கிறார்கள்.

அதற்கு அந்த நீதிபதியும் தீர்ப்பை தந்திருக்கிறார்.

**நாங்கள் சட்டத்தை மதிப்பவர்கள் நீதிக்கு தலை வணங்குபவர்கள்!**

நாங்கள் சட்டத்தை மதிப்பவர்கள், நீதிக்கு தலை வணங்குபவர்கள், எங்களுடைய தமிழ்நாடு முதலமைச்சரை போல் சட்டத்தை மதிக்கக்கூடிய ஒருவர் இந்தியாவிலேயே கிடையாது. அந்த அளவுக்கு சட்டத்துக்கு மரியாதை கொடுப்பவர் முதலமைச்சர்; சட்டத்தின் ஆட்சி தமிழ்நாட்டில் நடக்க வேண்டும் என்று விரும்புகின்றவர்.

எனவே 2014-இல் இரண்டு நீதிபதிகள் ஃபுல் பெஞ்ச் அதாவது டிவிஷன் பெஞ்ச் கொடுத்திருக்கக்கூடியது அந்த தீர்ப்பு; அந்த தீர்ப்பை *‘Set aside’* பண்ணாமலோ அல்லது அந்த தீர்ப்பின் மீது மேல்முறையீடு இல்லாமலோ புதிதாக ஒரு தனி நீதிபதியை வைத்து ஒரு தீர்ப்பை வாங்கி கொண்டு வந்து நாங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டால் எப்படி நிறைவேற்ற அனுமதிக்க முடியும்?

அப்படி அனுமதித்தால் தமிழ்நாடு அரசின் மீது என்ன குற்றச்சாட்டு வரும் என்பது உங்களுக்கு தெரியும். எனவே 2014 தீர்ப்பின் படி நாங்கள் நடந்து கொண்டிருக்கிறோம்.

இன்று போராடுகிறவர்கள் 2014 நீதிமன்ற தீர்ப்பை மறந்துவிட்டு பேசுகிறார்கள். நீதிமன்ற தீர்ப்பை மதிக்காதவர்கள் அவர்கள்தான். இன்றைக்கு யார் யாரெல்லாம் அப்படி பேசுகிறார்களோ அவர்கள் மீது 2014 தீர்ப்பினுடைய அடிப்படையிலே எந்த வழக்கையும் தொடர்வதற்கு தமிழக அரசுக்கு உரிமை உண்டு. ஆனால் 2014 தீர்ப்பை படித்து பார்க்காமல் அப்படி ஒரு தீர்ப்பு இருக்கிறதே என்பதே கூட தெரியாமல் அல்லது நீதிமன்றத்தில் அதை மறைத்துவிட்டு புதிதாக ஒரு கதையை கட்டிவிட்டு போனால் அதை மக்கள் நம்புவார்களா? தமிழ்நாட்டு மக்கள் இளிச்சவாயர்கள் அல்ல. ஏமாளிகள் அல்ல.

> **திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றும் வழக்கு!**
> **உச்சநீதிமன்றத்தில் - தமிழ்நாடு அரசு மேல்முறையீடு!**
>
> **திருப்பரங்குன்றம் மலை மீது கார்த்திகை தீபம் ஏற்றுவது குறித்த மனுவை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினை எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளது.**
>
> **திருப்பரங்குன்றத்தில் மலை மீது கார்த்திகை தீபம் ஏற்றுவது சம்பந்தமான வழக்கில் மனுவை உயர்நீதிமன்ற தனி நீதிபதி நேற்று முன்தினம் அளித்த தீர்ப்பை எதிர்த்து தமிழ்நாடு அரசு நேற்று மேல் முறையீடு செய்தது. இதனை உயர்நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்.**
>
> **இந்நிலையில் உயர்நீதிமன்ற தனி நீதிபதி அளித்த தீர்ப்பினை எதிர்த்து தமிழ்நாடு அரசு நேற்று முன்தினம் (4.12–2025) மேல் முறையீடு மனுவை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.**

அவர்களுக்கு வேண்டுமென்றால் அடிமை பழனிச்சாமி கிடைக்க முடியுமே தவிர வேறு எந்த அடிமைகளும் தமிழ்நாட்டில் கிடைக்க மாட்டார்கள்.

**மதநல்லிணக்க பூமி தமிழ்நாடுதான்!**

மத ஒற்றுமை, மத நல்லிணக்கம் இவற்றுக்கு எடுத்துக்காட்டான பூமி இந்தியாவிலேயே தமிழ்நாடுதான்; அதை இன்றைக்கும் நாம் நிரூபித்துக் கொண்டிருக்கின்றோம்.

மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தால் அதுக்கு மேல் என்ன இருக்கிறதோ அதை பற்றி சட்டத்துறையின் மூலமாக ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுக்கப்படும்.

இந்துத்துவானுடைய கைக்கூலிகளுக்கு அடிமையாக இருக்கிறார் எடப்பாடி பழனிச்சாமி!

எடப்பாடி பழனிச்சாமிக்கு வேறு வேலையே கிடையாது. தமிழ்நாடு அரசு மீது ஏதாவது குற்றச்சாட்டை சொல்ல வேண்டும் என்பது ஒன்றுதான் அவருடைய வேலை.

இந்த சம்பவத்தையும் அவர் எடுத்துக் கொண்டு இதில் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழ்நாடு அரசுக்கு ஆதரவாக நிற்க வேண்டியவர் இந்துத்துவாவினுடைய கைக்கூலிகளுக்கு அடிமையாக இருந்திருக்கிறார் என்பதை இதன் மூலமாக நிரூபித்திருக்கின்றார்.

தமிழ்நாட்டை பொறுத்தவரைக்கும் எல்லாரும் ஒன்று, இந்த தீர்ப்பை பொறுத்தவரை 2014ல் அவர்கள் பெரிதும் போற்றிக் கொண்டுள்ளார்களே, அம்மா அம்மா என்று உச்சரிக்கிறார்களே அந்த அம்மையார் ஆட்சியில் இருந்தபோது வந்த தீர்ப்புதான், ஆக அந்த அம்மையாரை விட எடப்பாடி பெரிய அறிவாளி என்று அவருடைய கட்சிக்காரர்கள் ஏற்றுக்கொண்டால் அதற்கு நாங்கள் குறுக்கே நிற்க தயாராக இல்லை.

ஜெயலலிதா அவர்கள் ஆட்சி இருக்கிற போதுதான் இந்த தீர்ப்பு வந்தது. அப்படி இந்த தீர்ப்பு சரியில்லை என்று சொன்னால் அந்த அம்மையாரே அப்பொழுது மேல் முறையீடு சென்றிருப்பார். அந்த அம்மையார் காலத்தில் போடப்பட்ட ஒரு தீர்ப்பு அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்ப்புக்கு தொடர்பாக இருப்பதினால்தான் இந்த நடவடிக்கை.

## இந்துத்துவாவின் கைக்கூலிகளுக்கு அடிமையாக இருக்கும் எடப்பாடி பழனிசாமி!

**அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத்த பழனிச்சாமி!**

அ.தி.மு.க. ஆட்சியில் இந்த இடத்தில் தான் இன்றைக்கு வழக்கப்படி ஏற்றப்படுகிற அதே இடத்தில் தான் ஏற்றப்பட வேண்டும் என்று அன்றைக்கு நீதிமன்றத்தில் வாதாடி இருக்கிறார்கள்.

இன்றைக்கு முழுவதும் தன்னை அடிமை சாசனம் எழுதிக் கொடுத்துவிட்ட காரணத்தால் தன்னை முழுவதுமாக மறந்துவிட்டு தான் முழு அடிமை என்பதை இந்த சம்பவத்தின் மூலம் அவர் நிரூபித்திருக்கின்றார். அண்ணா திமுக தொண்டர்கள் வெட்கப்பட வேண்டும்.

*CISF* குறித்த கேள்விக்கு “எங்களை பொறுத்தவரை தமிழ்நாடு காவல்துறை சிறப்பாக செயல்படுகிறது. சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டுமோ அந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றோம். அதை மீறி எந்த சக்தி வந்தாலும் அந்த சக்தியை எதிர்கொள்கிற சக்தி எங்களுக்கு இருக்கிறது.”

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் பேட்டியளித்தனர்.

---

### புதுக்கோட்டை - அறந்தாங்கியில்

## பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

### அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினர்!

புதுக்கோட்டை, டிச. 6 –

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மற்றும் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி களை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 03.12.2025 அன்று வழங்கினார்கள்.

முதலமைச்சர் அவர்கள் தமிழக மாணவர்கள் இடைநிற்றல் இன்றி கல்வி கற்று வாழ்க்கை தரத்தை மேம்படுத்தி சமூகத்தை முன்னேற்றும் உயர்ந்த சக்தியாக உருவெடுக்கும் வகையில் பள்ளிக் கல்வித்துறையின் மூலம் எண்ணற்ற பல திட்டங்களை வழங்கி கல்வித்துறையில் புரட்சியை ஏற்படுத்தி வருகிறார்கள். கல்வி என்பது ஏழை மாணவர்களின் வாழ்க்கையை உயர்த்தும் ஒரே ஆயுதம். அதை அடைய எந்த தடையும் இருக்கக் கூடாது என்பதை செயல்படுத்திட மாணாக்கர்களின் கற்றல் திறனை ஊக்குவிக்கும் வகையில் இந்தியாவின் வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுத்திடாத கல்விக்கான பல்வேறு முன்னோடி திட்டங்களை மிகச்சிறப்பாக செயலாற்றி வருகிறார்கள்.

அந்தவகையில் மாணவர்கள் மேல்நிலைப்பள்ளி பயின்றிட தங்கள் இருப்பிடங்களுக்கு அருகில் உள்ள பள்ளிகளுக்கு சரியான நேரத்திற்கு சென்று கல்வியினை சோர்வின்றி கற்றிட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு மாணவ, மாணவிகளின் தேவையறிந்து விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். இதன் பயனாக மாணவ, மாணவிகள் எவ்வித சிரமமுமின்றி சரியான நேரத்திற்கு பள்ளிக்குச் சென்று கல்வி கற்பதற்கு மிகுந்த பயனுள்ளதாக அமைகிறது. இத்திட்டத்தின் மூலம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பிளஸ் 1 பயிலும் மாணவர் மற்றும் மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள். அதன்படி பள்ளிக்கல்வித் துறை யின் சார்பில் அறந்தாங்கி அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் 137 மாணவர்களுக்கும், அறந்தாங்கி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 258 மாணவ, மாணவிகளுக்கும் விலையில்லா மிதிவண்டிகளை இயற்கை வளங்கள் துறை அமைச்சர், பிற்படுத் தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆகியோர் வழங்கினார்கள்.

அதனைத் தொடர்ந்து இயற்கை வளங்கள் துறை அமைச்சர், கட்டுமாவடி அரசு மேல்நிலைப்பள்ளி, மணமேல்குடி அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மீமிசல் அரசு மேல்நிலைப்பள்ளி, ஆவுடையார்கோவில் அரசு மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி களை வழங்கினார்.

மேலும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சுப்பிர மணியபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி, சிலட்டூர் அரசு மேல்நிலைப்பள்ளி, சிதம்பரவிடுதி அரசு மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

தமிழக அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் மாணவர்களின் கல்வி பயணத்தை உயர்த்தி அவர்களின் வாழ்க்கை பாதையை மாற்றும் ஒரு காலச்சுவடாக அமைந்துள்ளது.

இந்நிகழ்ச்சிகளில், அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.ராமச்சந்திரன், முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் உதயம் சண்முகம் , நகர்மன்றத் தலைவர் இரா.ஆனந்த், நகர்மன்றத் துணைத் தலைவர் தி.முத்து, அறந்தாங்கி மாவட்ட கல்வி அலுவலர் சொ.மாயக்கிருஷ்ணன், மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் முனைவர். மெ.சிசாலை செந்தில், பள்ளித் துணை ஆய்வாளர் இளையராஜா, தலைமை ஆசிரியர்கள் கார்த்திகா, தாமரைச்செல்வன் மற்றும் க. ராஜேந்திரன், வே.பொன்துரை, சக்திராமசாமி, துளசிராமன், காசி மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




புதுக்கோட்டை மாவட்டம்/ மாநகராட்சி, 9ஏ நத்தம் பண்ணை பகுதியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில், தமிழ்நாடு நகர்புற வேலைவாய்ப்புத் திட்டம் 2025–26ன் கீழ் புதுக்கோட்டை மாநகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட உள்ள பல்வேறு திட்டப் பணிகளை அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் 03.12.2025 அன்று மரக்கன்றுகளை நட்டு, துவக்கி வைத்தார்கள். உடன், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் , புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையர் த.நாராயணன், மு.க.ராமகிருஷ்ணன், வே.ராஜேஸ் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.


---

### இன்று – சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் நினைவு நாள்! திருச்சியில்

## திருவுருவச் சிலைக்கு - அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் மாலை அணிவித்தல்!

### கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர்கள் க,வைரமணி – ந,தியாகராஜன் வேண்டுகோள்!





திருச்சி, டிச. 6 -

திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் க.வைரமணி, வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ந.தியாகராஜன் எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கை வருமாறு:

இன்று ( 06.12.2025 - சனிக்கிழமை) காலை 8.00 மணி அளவில் சட்டமேதை பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு கழக முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே. என்.நேரு அவர்கள் தலைமையிலும்,

திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் வழக்கறிஞர் க.வைரமணி, வடக்கு மாவட்ட செயலாளர் ந.தியாக ராஜன் எம்.எல்.ஏ. மற்றும் மாநகர செயலாளர் மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் ஆகியோர் முன்னிலையிலும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் திருச்சி மத்திய, வடக்கு மாவட்ட, மாநகர, அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், முன்னாள்,

இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதி நிதிகள், அனைத்து அணிகளின் பொறுப்பாளர்கள் கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு மறைந்த சட்டமேதை பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்திட வேண்டுகிறோம்.

இவ்வாறு அவ்வறிக்கையில் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.